**மெததும்பர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 31 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 26 திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 31 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டன.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் மெததும்பர பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | காணி மற்றும் கட்டிட அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 3,014,373 பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். எதிர் காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டில் நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யாது கிடைத்த ரூபா 2,128,534 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். எதிர் காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலிற்கு வருமான பங்களிப்புக் கணக்கிற்குமிடையில் ரூபா 1,218,714 வித்தியாசம் நிலவியது. | சரியாக கணக்கீட செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். எதிர் காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iv) | சபைக்கு சொந்தமான 05 காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பிட்டு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 10 காணிகள் மற்றும் கட்டிடங்களில் 5 ஐ மூலதனமாக்கியுள்ளதாக அறிவிக்கறேன். |

| | | | |
|---|---|---|---|
| (v) | மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு கட்டணத்திற்காக கணக்குகளில் ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். எதிர் காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நானாவித கடன்கொடுனர் பேரேட்டுக் கணக்கு மற்றும் அட்டவணைக்கிடையில ரூபா 278,302 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | குறித்த மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்கை சீர் செய்ய வேண்டும். | எதிர் காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 01 - 05 ஆண்டுகள் வரையான காலத்தை விஞ்சியிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 41,313,567 மற்றும் 05 ஆண்டுகளை விஞ்சிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 14,483,500 ஆனது. | பெற வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர் காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 01 - 05 ஆண்டுகளிற்கு இடையிலான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 29,036,980 ஆனதுடன், 05 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளின் கூட்டுத் தொகைச் ரூபா 13,076,357 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். எதிர் காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

(இ) **கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 35,728,634 ஆன 8 கணக்கு விடயங்களிற்குரிய நிலையான சொத்து பதிவேடு, வைப்பு பதிவேடு, அட்டவணை, மீதி உறுதிப்பாடு போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இலக்கம் 15 கொண்ட பிரதேச சபைச் சட்டம் | | | |
| | (i) 149 பிரிவு | சபை அதிகார எல்லையில் 09 உணவகங்களிலிருந்து சுற்றுலா சபைக்கு சமர்பிக்கும் கணக்கு கூற்றுகளை பெற்றுக் கொள்ளாது வருமான கூற்றின் அடிப்படையில் ரூபா 1,648,569 பெறப்பட்டிருந்தது. | சுற்றுலா சபைக்கு சமர்பிக்கும் கணக்கின் மீது கட்டணம் அறவிட வேண்டும். | 11 உணவகங்களிற்கு தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கோரிய போதும், 3 உணவகங்களின் தகவல்கள் மாத்திரம் அனுப்பப்பட்டதாக அறிவிக்கிறேன். |
| | (ii) 154 (i) பிரிவு | வரிபட இலக்கம் 1230 காணியின் பகுதிகளை விற்க சபையின் அங்கீகாரம் இல்லாததுடன் வரியும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | விற்பனை வருமானம் மீது வரி அறவிட வேண்டும். | அனுமதியை பெற்றுக் கொள்ள தகவல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வரிபடம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கட்டணம் அறவிடுவதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (2) பிரிவு | வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை ஒன்று சமர்பிக்கப்படவில்லை. | செயலாற்றல் அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டியமை. | ஏற்றுக் கொள்கிறேன். |
| (இ) | 1987 ஆண்டு 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 126 (vii) (ஊ) பிரிவு மற்றும் 2016 திசெம்பர் 13 திகதி வெளியிடப்பட்ட வர்தமானி. | 40 விளம்பரப் பலகைகளிலிருந்து ரூபா 46,689 கட்டணம் அறவிடப்படவில்லை. | வருட ஆரம்பத்தில் கணிப்பீடு மேற்கொண்டு வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | விளம்பரப் பலகை கட்டணம் செலுத்தாத நிறுவனங்களிற்கு கட்டணம் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 104(4) | JCB இயந்திரத்திற்கு 4 சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட ரூபா 157,089 விபத்துகளிற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | காப்புறுதியினால் 75 சதவீதம் ஈடுசெய்யப்பட்டுள்ளதுடன், இழப்பீடு செலுத்தாமை தொடர்பாக காப்புறுதி ஒம்புட்ஸ்மன் அறிவூட்டப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |
| (உ) | இலக்கம் என்பீ/ஆர்டீசீ/டீஆர்/சீஎம்/12/7 மற்றும் 2012 செப்டம்பர் 5 திகதிய முச்சக்கர வண்டி ஒழுங்கமைப்பிற்காக முறைமை ஒன்றை அறிமுகம் செய்வதற்குரிய அமைச்சரவை விஞ்ஞாபனம் | பிரதேச சபையினால் 26 முச்சக்கர வண்டி தரிப்பிடங்களை நடாத்தி 497 முச்சக்கர வண்டிகளை பதிவு செய்துள்ள போதும், ரூபா 1,884,375 ஆன அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | முச்சக்கர வண்டி சேவையை முறையாக ஒழுங்கமைத்து கட்டணம் அறவிட வேண்டும். | முச்சக்கர வண்டி குழுவொன்றை அமைத்து ஒழுங்கமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஊ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3:4:1 அத்தியாயம் | குப்பை பாத்திரங்களை கொள்வனவு செய்ய விலை மனுக் கோராது ஒரு நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 190,500 செலவிடப்பட்டிருந்தது. | பெறுகைகள் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொள்வனவு செய்த நிறுவனம் சந்தை விலையை விட குறைந்த விலைக்கு வழங்கியுள்ளது. |

## 1.5 வரி தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2010 ஆண்டு முதல் நிலவி வரும் ரூபா 24,082 ஆன பெறுமதி சேர்க்கப்பட்ட வரித் தொகையை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி சேர்க்கப்பட்ட வரித் தொகை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண.டும் | அவதானிப்பை ஏற்றுக் கொள்வதாகவும், எதிர் காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 4,989,546 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 12,383,727 ஆனது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்ளில் தொடர்ந்து முன்கொண்டுவரப்படும் ரூபா 160,728 ஆன முற்பண மீதி மற்றும் ரூபா 400 ஆன மறுக்கப்பட்ட காசோலை பெறுமதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இம் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்வதுடன், எதிர் காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 பில் போடப்பட்ட வருமானம் | 2019 சேர்க்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம | 2018 பில் போடப்பட்ட வருமானம | 2018 சேர்க்கப்பட்ட வருமானம | 2018 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 3,647,080 | 3,930,546 | 3,044,037 | 2,238,750 | 3,615,024 | 3,693,815 | 4,533,420 | 2,734,289 |
| (ii) | வாடகை | 3,124,150 | 3,241,488 | 2,590,792 | 2,373,783 | 2,337,626 | 2,598,674 | 3,327,988 | 1,896,747 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,167,870 | 3,435,463 | 3,433,4633 | 15,500 | 3,073,600 | 3,141,886 | 3,076,836 | 3,079,836 |
| (iv) | ஏனைய வருமானம் | 31,526,314 | 31,526,314 | 1,660,583 | 30,863,252 | 474,100 | 549,600 | 610,580 | 750,630 |
| | | 41,465,414 | 42,133,811 | 10,728,875 | 35,492,285 | 9,500,350 | 9,983,975 | 11,548,824 | 8,461,502 |

#### 2.3.2 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொருளாதார மத்திய நிலைய கடையறைகளிலிருந்து 03 மாதம் முதல் 7 வருடங்கள் வரை ரூபா | நிலுவையை அறவிட நடவடிக்கை | ஏற்றுக்கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | 1,119,609 கடையறை வாடகை அறவிடப்படவில்லை. மூன்று குத்தகைகாரருகளுக்கு ரூபா 333,924 ஆன தொகை அறவிடுவதற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. | எடுக்க வேண்டும். | |
| (ஆ) | 2 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை ரூபா 177,273 நிலை வாடகை நிலுவையாக காணப்பட்டது. | நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (இ) | சபைக்கு சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு வழங்கி 2004 வருடம் முதல் 2015 ஆண்டு வரை அறவிட வேண்டியதான நிலுவை வாடகை ரூபா 1,081,396 ஆனது. | இம் மீதி தொடர்பாக துரிதமாக நடவடிக்கை எடுத்து கணக்காய்விற்கு அறிக்கையிட வேண்டும். | மீதிகளை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 2,054,651 மற்றும் ரூபா 28,470,519 ஆனது. | குறித்த பணத்தை சபைக்கு அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகார சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை செய்வதற்காக உப விதிகள் விதிக்கபட வேண்டிய போதும் | சபைக்கு வருமானத்தை ஈட்டிக் கொள்ளக் கூடிய உப விதிகளை விதித்து வருமானத்தை ஈட்டிக் கொள்ள வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

19 விடயங்களிற்கு மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை (out come) பெற்றுக்கொள்ளப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2014 ஆண்டு புற எழுச்சி ஒதுக்கீட்டினால் ரூபா 7,757,342 செலவில் நிர்மாணிக்கப்பட்ட உடிஸ்பத்துவ சந்தைக் கட்டிடத்தின் கீழ் மாடி விளைவற்று நிலவியது. | எதிர்பார்த்த விளைவுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்பிட்டு டென்டர் கோர நடவடிக்கை எடுத்த போதும் எவ்வித டென்டரும் சமர்ப்பிக்கப்படவில்லை என அறிக்கையிடுகிறேன் |
| (ii) | ரூபா 8,205,546 செலவில் தினப் பராமரிப்பு நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் விளைவுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | எதிர்பார்த்த விளைவுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானத்தை ஏற்றுக் கொள்வதாகவும் எதிர் காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(இ) பணிகளை நிறைவேற்றலின் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,050,718 பெறுமதியான 3 வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை. | ஒதுக்கீடு செய்யப்பட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | 7 செயற்பாடுகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் தினந்தோறும் 4 டொன் கழிவுப் பொருட்கள் ஒன்று சேர்கின்ற போதும் ஒழுங்கான கழிவுப் பொருள் முகாமை கொள்கையொன்று பின்பற்றப்படவில்லாததுடன், உக்கலடையா கழிவுப் பொருட்கள் 1 டொன் அளவு பிரதானமாக 3 இடங்களில் சூழலிற்கு தீங்கு ஏற்படும் விதத்தில் ஒழுங்கீனமாக போடப்பட்டிருந்தது. | சூழலிற்கு தீங்கு ஏற்படாத விதத்தில் கழிவுகளை முகாமை செய்ய வேண்டும். | உடிஸ்பத்துவையில் கழிவுகளை பிரித்து உக்கலடையா கழிவுகள், கழிவு முகாமை மத்திய நிலையத்தில் இடப்பட்டு, மெததும்பர நகரில் கழிவுகள் பிரித்து பெற்றுக்கொண்டு உக்கலடையும் கழிவுகள் அழுத்வத்த இயற்கை பசளை கொட்டிலிற்கு வழங்கப்படுவதாக அறிவிக்கிறேன். |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்குகளை போதியளவு இனங்கண்டிருக்காததுடன், அதன் காரணமாக அது தொடர்பாக போதிய கடமை பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தெல்தெணிய பேருந்து தரிப்பிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடத்தில் குத்தகை வழுங்கவிருந்த கடையறை தற்காலிகமாக தெல்தெணிய டிப்போ ஊழியர்களின் ஓய்வு அறையாக பயன்படுத்த இடமளித்ததால் சபைக்கு 2019 ஆண்டு ரூபா 501,500 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை சபையின் தேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்த வேண்டும். | இக் கடையறையை பெற்றுக் கொள்ள தெல்தெணிய டிபோவிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | தெல்தெணிய நகரில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வியாபார கட்டிடத் தொகுதியின் கடையறைகளுக்காக குத்தகைகாரர்கள் ஒரே முறையில் செலுத்தும் ரூபா 27,600,000 தொகையை வைப்புச் செய்திருந்தனர். கடையறைகளை ஒதுக்குவது பிரச்சினை ஆகையால் 22 குத்தகை காரர்களினால் சபைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளமை காரணமாக 2019 செப்தம்பர் 30 திகதி வரை ரூபா 1,051,600 தொகை வழக்கறிஞர் கட்டணம் செலுத்த வேண்டி இருந்தது. | உத்தேச வியாபார கட்டிடத் தொகுதியை நிர்மாணித்து குத்தகைகாரர்களுக்கு கடையறைகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். | 21 வழக்குகளில் 8 வழக்குகள் வழக்கறிஞர் கட்டணத்தின் கீழ் தள்ளுபடியானதுடன், தடை உத்தரவு காணப்படுவதால் நிர்மாணத்தை துரிதப்படுத்த முடியாதுள்ளது என அறிவிக்கிறேன். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்** | | |
| | ஆளணியில் 16 வெற்றிடங்கள் நிலவின. | ஊழியர வெற்றிடங்களை நிரப்பிக்கொள்ள வெண்டும். | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| **(ஆ)** | **ஊழியர் கடன்** | | |
| | இடம் மாறிச் சென்ற 22 உத்தியோகத்தர்களின் 1 ஆண்டு முதல் 18 வரை காலத்திற்குரிய ரூபா 1,695,507 ஆன கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது மீதி குறைந்துள்ளதாக அறிவிக்கிறேன். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை நீர் கருத்திட்டங்களின் நீர் மாணி பொருத்தப்படாத 191 எண்ணிக்கையான நுகர்வோர்களிடம் மாதத்திற்கு ரூபா 200 மற்றும் 500 ஆன நிலையான கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. | நீர் மாணி பொருத்தி நீர் நுகர்வோர்களிடம் வருமானம் பெற நடவடிக்கை எடுத்தல். | நீர் மாணி பொருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | உடிஸ்பத்துவ சந்தை கட்டிடத்தின் மேல் மாடி 2 கடையறைகளை குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்காததால் ரூபா 328,000 வருமானம் இழக்கப்பட்டிந்தது. | டென்டர் கோரி குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்பீட்டை பெற்று டென்டர் கோரிய போதும், எந்த டென்டர் காரரும் முன்வராததால் மூன்றாம் முறையும் டென்டர் கோரவுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (இ) | தெல்தெணிய நகரில் சபைக்கு சொந்தமான 8 காணிகள் மதிப்பீடின்றி 2009 ஆண்டு முதல் ரூபா 300 ஆன நில வாடகை அறவிடப்பட்டு குத்தகை வழங்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்து குத்தகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக் காணிகளை மதிப்பீடு செய்யுமாறு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவித்தள்ளதாக அறிவிக்கிறேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களிலிருந்து பெறவேண்டிய வருமானம் பெறப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 24,928,666 பெறுமதியான மோடார் கிரேடரினால் 2019 ஆண்டு வருமானம் பெறப்படாமல் அலுவலக வளவில் விளைவற்று போடப்பட்டிருந்தது. | சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.5.2 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 600,000 பெறுமதியான ஜிப் வண்டியொன்று 5 ஆண்டுகளை விஞ்சிய காலமாக விளைவற்று நிலவியது. | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத சொத்துக்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | ஓர் டெக்டர் மற்றும் ஓர் டிரேலர் பயன்பாட்டிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்த முடியாத சொத்துக்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | எதிர் காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.5.3 வாகனப் பயன்பாட்டு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான டிபர் வண்டி மற்றும் போடோன் லொறி வண்டி குறை பயன்பாட்டுடன் நிலவின. | சொத்துக்களிலிருந்து வருமானம் ஈட்டிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுப்பததாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | டேலரிற்கு டெக்டர் ஒன்று இல்லாததால் பயன்பாட்டிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்தது. | இட் டேலரை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.6 பெறுகைகள்**

------------------

**பெறுகைகள் திட்டம்**

-------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ---------------------------------------------- | --------------- | ----------------------------------------------- |
| மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |